## திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு, மன்னார் மாவட்ட செயலகம் நடாத்தும்

## இலக்கியப் போட்டிகள் - 2021

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலுடன் மன்னார் மாவட்ட செயலகத்தினால் நடாத்தப்படவுள்ள திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு பல்வேறு இலக்கியப்போட்டிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது..

மன்னார் மாவட்ட பாடசாலைமாணவர்கள், கலை இலக்கியத்துறை சார்ந்தவர்கள் மற்றும் மாவட்டத்தில் பணியாற்றும் அரச அலுவலர்கள் மத்தியில் திருக்குறள் பற்றியும்திருவள்ளுவர் பற்றியும் அறிதலையும் பயில்தலையும் மேம்படுத்தும் நோக்கில் இந்தப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

போட்டிகள் நடாத்தப்படவுள்ள பிரிவுகளும் அவர்களுக்குரிய போட்டிகளும்

01. பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்,
    - கனிஸ்டபிரிவு – தரம் 6 முதல் 8வரை - பேச்சு, திருக்குறள் மனனம்
    - மத்திய பிரிவு – தரம் 9 முதல் 11வரை - கவிதையாக்கம் , கட்டுரை
    - மேற்பிரிவு – தரம் 12 முதல் 13 வரை -சிறுகதை, குறுநாடகப்பிரதியாக்கம்
02. கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான (கலை இலக்கியத்துறை சார்ந்தவர்கள் ) போட்டிகள்,
    - கவிதை . சிறுகதை,ஓவியம்
03. அரச அலுவலர்கள் - சிறுகதை, குறுநாடகப்பிரதியாக்கம், ஓவியம்

நாட்டில் நிலவும் கொரோனா இடர்நிலைமை காரணமாக பேச்சு, திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகள் நிகழ்நிலை ( ZOOM செயலி) வழியாகவும், ஏனைய போட்டிகளுக்கான (கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாடகபிரதியாக்கம் மற்றும் ஓவியம்) ஆக்கங்களை எழுத்துப்பிரதியாக பெற்றும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆக்கங்களை எழுத்துப்பிரதியாக ஒப்படைக்கும் போது**" மாவட்ட செயலாளர். மாவட்ட செயலகம், மன்னார்"**என்ற முகவரியில் நேரிலோ அன்றி தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும். பேச்சு, திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் மட்டும் விண்ணப்பங்களை **attalmannar @gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும்அனுப்பிவைக்கமுடியும்.

போட்டிகளில் பங்குபற்றும் அனைவரும் தமது விண்ணப்பங்களை தரப்பட்ட மாதிரிப்படிவத்திற்கு அமைவாகத் தயாரித்து போட்டியாளர்கள் தமது ஆக்கங்களையும் (பேச்சு, திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகள் தவிர) இணைத்து எதிர்வரும் 25.10.2021 திகதிக்கு பிந்தாமல் அனுப்பிவைத்தல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறுவோருக்கு சான்றிதழ் மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

## போட்டிகளும் அவற்றிற்குரிய தலையங்கங்களும்

01. **பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்,**

**கனிஸ்டபிரிவு –பேச்சுப்போட்டி,**

பேச்சுப்போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி 5 நிமிடங்களுக்கு உட்பட்டதாக தமது திறமையை வெளிப்படுத்தல் வேண்டும்.

- திருக்குறள் காட்டும் ஒழுக்கம்
- திருக்குறள் கூறும் கல்வியின் சிறப்பு
- திருக்குறள்கூறும் நட்பு

**கனிஸ்டபிரிவு –திருக்குறள் மனனம்**

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள்

- கடவுள் வாழ்த்து,
- வான்சிறப்பு,
- நீத்தார் பெருமை,
- அன்புடைமை ,
- செய்ந்நன்றியறிதல்,
- அடக்கமுடைமை

  ஆகியஅதிகாரங்களில் இருந்து தாம் விரும்பிய ஏதாவது இரண்டு அதிகாரங்களை மனனம் செய்து உரிய முறையில் ஒப்புவித்தல் வேண்டும்.

**மத்திய பிரிவு - கவிதையாக்கம்**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி மரபுமுறையிலோ அன்றி புதுக்கவிதை முறையிலோ தமது ஆக்கத்தினை சமர்ப்பித்தல் முடியும்.(மரபுக்கவிதையாயின் 04 தொடக்கம் 07 பாக்களும், புதுக்கவிதையாயின் 20 வரிகள் தொடக்கம் 30 வரிகள் வரையில் இருத்தல் வேண்டும்)

- பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்…..
- தேறற்க யாரையும் தேராது……
- பகையகத்துச் சாவார் எளியர்………

**மத்திய பிரிவு - கட்டுரை**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி 250 தொடக்கம் 300 சொற்களுக்குஉட்பட்டதாக தமது ஆக்கத்தினை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.

- திருக்குறளும் மாணவ சமூகமும்
- திருக்குறளிலுள்ள நல்ல முத்துக்கள்
- திருக்குறளும் எமது வாழ்வியலும்

**மேற்பிரிவு- சிறுகதை,**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி தமது ஆக்கத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். (ஆக்கங்கள் A-4 கடதாசியின் 5 தொடக்கம் 7 பக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும் - எழுத்துரு அளவு 11 Bamini)

- கற்றார்க்கு சென்ற இடமெல்லாம் …..
- இவன் தந்தை எந்நோற்றான் ……..
- முகத்தின் இனிய நகாஅ………….

**மேற்பிரிவு- குறுநாடகப்பிரதியாக்கம்**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினை கருப்பொருளாக கொண்டு25 தொடக்கம் 30 நிமிடங்களுக்கு மேடையேற்றத்தக்கதாக தமது ஆக்கத்தினை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.

- கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு………
- அரம்போலும் கூர்மையரேனும்……..
- அரியவற்றுள் எல்லாம் அரிதே……..
-

**02. கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கான போட்டிகள்,**

**கவிதைபோட்டிக்கான விதிமுறைகள்**

கவிதைப் போட்டிக்காக ஆக்கங்களை சமர்ப்பிப்போர் பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி மரபுமுறையிலோ அன்றி புதுக்கவிதை முறையிலோ தமது ஆக்கத்தினை சமர்ப்பித்தல் முடியும்.(மரபுக்கவிதையாயின் 05 தொடக்கம் 08 பாக்களும், புதுக்கவிதையாயின் 30 வரிகள் தொடக்கம் 40 வரிகள் வரையில் இருத்தல் வேண்டும்)

- குடிதழீஇக் கோல் ஓச்சும்………………….
- ஆக்கங் கருதி முதல் இழக்கும்……..
- அமைந்தாங்கு ஒழுகுவான் அளவு…………….

**சிறுகதைப் போட்டிக்கான விதிமுறைகள்**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி தமது ஆக்கத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். (ஆக்கங்கள் A-4 கடதாசியின் 6 தொடக்கம் 8 பக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும் - எழுத்துரு அளவு 11 Bamini)

- சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்…………….
- வைத்தான் வாய்சான்ற பெரும் பொருள்……..
- பிறர் பழியும் தம் பழியும்……………..

**ஓவியப் போட்டிக்கான விதிமுறைகள்**

தேர்ந்தெடுத்த ஒரு திருக்குறளின் கருத்தினை அடியொற்றியதாக Legal(21.59 X 35.56 cm)தாளில் அமைதல் வேண்டும். அத்துடன் ஓவியத்தின் கீழ் பொருத்தமான திருக்குறளினை எழுதுதல் வேண்டும். விரும்பிய வர்ணக்கலவைகளை பயன்படுத்திக்கொள்ள முடியும்

03. அரச அலுவலர்களுக்கான போட்டிகள்

**சிறுகதைப் போட்டிக்கான விதிமுறைகள்**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினைப் பற்றி தமது ஆக்கத்தினை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். (ஆக்கங்கள் A-4 கடதாசியின் 6 தொடக்கம் 8 பக்கங்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும் - எழுத்துரு அளவு 11 Bamini)

- பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள்…….
- களவினால் ஆகிய ஆக்கம்……..
- பருகுவார் போலினும் பண்பு இலார்………………

**குறுநாடகப் பிரதியாக்கப் போட்டிக்கான விதிமுறைகள்**

பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்றினை கருப்பொருளாக கொண்டு 25 தொடக்கம் 30 நிமிடங்களுக்கு மேடையேற்றத்தக்கதாக தமது ஆக்கத்தினை எழுதி சமர்ப்பித்தல் வேண்டும்.

- மனம் தூய்மை செய்வினை………..
- ஆற்றுவார் ஆற்றல் இகழாமை………..
- முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ……………

**ஓவியப் போட்டிக்கான விதிமுறைகள்**

தேர்ந்தெடுத்த ஒரு திருக்குறளின் கருத்தினை அடியொற்றியதாக Legal (21.59 X 35.56 cm) தாளில் அமைதல் வேண்டும். அத்துடன் ஓவியத்தின் கீழ் பொருத்தமான திருக்குறளினை எழுதுதல் வேண்டும். விரும்பிய வர்ணக்கலவைகளை பயன்படுத்திக்கொள்ள முடியும்

எனது இல MN/GA./S.CUO/Tirukkural Week

மாவட்ட செயலகம்

மன்னார்

2021.09.24

…………………………

…………………………

………………………....

திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு

மன்னார் மாவட்ட செயலகம் நடாத்தும் போட்டிகள் - 2021

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டலுடன் மன்னார் மாவட்ட செயலகத்தினால் வருடந்தோறும் திருவள்ளுவர் விழா மிகவும் விமரிசையாக நடாத்தப்படுவது தாங்கள் அறிந்ததே.

எனினும் இவ்வாண்டு நாட்டில் நிலவும் கொரோனா இடர்நிலை காரணமாக விழாவிற்கான திகதி இதுவரை தீர்மானிக்கப்படாத போதிலும் திருவள்ளுவர் விழாவிற்கான முன்னேற்பாடாக மன்னார் மாவட்ட மாணவர்கள் , கலைஞர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் திருவள்ளுவர் மற்றும் திருக்குறள் பற்றிய தேடலுடன் கூடியதான போட்டிகளை நடாத்துவதற்கு நாம். தீர்மானித்துள்ளோம்.

போட்டிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பன இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி போட்டிகளை சிறப்புற நடாத்துவதற்கான தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி அ.ஸ்ரான்லி டி மெல்

அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்

மன்னார்